# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 85/2006

Deposition of **PW.3** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 24.10.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : மணிவேல் Father's Name : வெள்ளையன்

துவக்க நேரம்: 12.28 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எந்த சர்வே எண் குறிப்பிட்டு அனுப்பபட்ட இருந்தது என்றால் ச.எண்.413/15, 414/8, இதன் TS.No. 105, வார்டு-A, Block-28 என குறிப்பிட்டு அனுப்பபட்டியிருந்தது. மேற்படி சர்வே எண்களுக்கான டவுன் சர்வே எண். 105-என்பது எந்த ஆண்டு மாற்றப்பட்டது என்றால் கடந்த 2001-ஆம் ஆண்டு மாற்றப்பட்டது. டவுன் ச.எண்.105-ற்கு தெற்கு, மேற்கு, கிழக்கு ஆகிய திசைகளில் பாதை அமைந்துள்ளது என்றால் சரிதான்.

2. தாவா சொத்தானது மேற்படி சர்வே எண்ணில் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் தென்புறத்தில் கிழமேலாக ஒரு சந்து அமைந்துள்ளது என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கு மேற்கு திசையில் யாருடைய நிலம் உள்ளது என்றால் காலியிடமாக உள்ளது, அது யாருக்கு சொந்தமானது என்று தெரியவில்லை. 2-ம் பிரதிவாதி ராஜேந்திரன் வீட்டின் கிழபுறத்தில் உள்ள சுவர் பொது சுவரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் தென்புற சுவர் பொது சுவரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் அந்த சுவற்றின் தென்புறத்தில்

சந்து ஒன்று உள்ளது. 2-ம் பிரதிவாதி தனது வீட்டிற்கு T.S.No.105-ஐ சுற்றியுள்ள பாதை வழியாக வாதியின் வீட்டிற்கு தென்புறத்தில் உள்ள பொது சந்து வழியாக அவரது வீட்டின் பின்புறம் உள்ள காலியிடத்திற்கு செல்ல இயலுமா என்றால் போக முடியும் ஆனால் அந்த சந்து பொது சந்தா என்று எனக்கு தெரியாது.

3. மேற்படி சந்தின் தென்புறத்தில் யார் யார் இடம் உள்ளது என்றால் தென்கிழக்கில் சிவகாமி, ராஜேந்திரன் என்பவரது வீடும், அவரது வீட்டிற்கு மேற்கில் ராஜா என்பவரது வீடும், அவரது வீட்டிற்கு மேற்கில் வாதி பாப்பாத்தி வீடும் உள்ளது, வாதியின் வீட்டிற்கும் மேற்கு புறத்தில் குமார் வீடு உள்ளது. ராஜா என்பவரது வீட்டின் பின்புறத்தில் சந்தை நோக்கி வாசல்படி உள்ளது என்றால் சரிதான்.

4. பழைய ச.எண்.413/15-ல் உள்ள இடத்தில் எவ்வளவு இடம் T.S.No.105-ல் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி என்னால் கூற இயலாது. Ex.X2 ஆவணத்தில் 5 நபர்களின் பெயர் கூட்டாக அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி 5 நபர்களுக்கும் தனிதனியாக வீடுகள் உள்ளது என்றால் சரிதான், ஆனால் Ex.X2 ஆவணத்தில் நான்கு வீடுகளின் கதவு எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 4 வீடுகளும் யார் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என்னால் கூற இயலாது. Ex.X2 ஆவணத்தில் 17-வது Column எதை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அடங்கல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

5. Ex.X2 ஆவணத்தின்படி T.S.No.105-க்கு கடந்த 2022-ம் ஆண்டுதான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் உள்ள இடமானது வருவாய்த்துறை கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரிதான். ஆனால், தொல்லியல் துறையிலிருந்து மேற்படி இடத்தை ஒப்படைக்க கேட்டுள்ளார்கள்.

<u>**வாதி தரப்பு மறுவிசாரணை:-**</u>

1. தாவா சொத்து உள்ள பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது என்றால் கோட்டை என்று அழைக்கப்படுகிறது. ஆரம்பத்தில் கோட்டை என்ற பகுதி யார் கட்டுப்பாட்டில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தாவா சொத்தின் மேற்கு பகுதியில் என்ன அமைந்துள்ளது என்றால் காலியிடம் உள்ளது. மேற்படி காலியிடத்தில் நான் பார்வையிட சென்றபோது கிணறு இருந்ததா என்றால் இல்லை. எனது முதல் விசாரணையில் கிணறு இல்லை என்றுதான் கூறினேன்.

முடிவு நேரம்: 12.56 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.85/2006, Dt.24.10.2025.